1981 செப்டம்பர் 11]

(முற்பகல் 10-20)

2. தகவல் கோரல்.

(அ) கைதான உறுப்பினர்களை விடுதலை செய்வது குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையினுடைய இந்தக் கூட்டத் தொடர் இன்றோடு நிறைவு பெறுவதாக இருக்கிறது. அண்மையிலே ஸ்ரீலங்காவிலே வாழும் தமிழர்களுக்கு இழைக்கப் பட்டிருக்கிற அநீதியை கண்டிக்கிற அளவிலே சென்னையிலே தடை உத்தரவை மீறிய காரணத்தாலே நம் பேரவையினுடைய உறுப்பினர்களாக இருக்கக் கூடிய திருவாளர்கள் சோமு, புருஷோத்தமன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வருகிற 8ஆம் தேதியன்று பொது ஹர்த்தால் என்ற வகையில் எல்லாக் கட்சிகளும் கலந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையை எடுக்க இருக்கிற காரணத்தாலே, ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க, கைது செய்யப்பட்ட அத்தனைபேர் களையும் விடுதலை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(ஆ) தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தற்சமயம் நாம் சென்னையி லிருந்து கோயம்புத்தூர் போகவேண்டும் என்று டிக்கட் எடுத்தால் எமலோகத்திற்குத்தான் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ரயில்வே இலாகா அப்படி இருக்கிறது. இன்றைய தினம் தமிழ் நாடு எக்ஸ்பிரஸ் கவிழ்ந்து உயிர்சேதமும் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. இப்படி தினந்தோறும் 5 ரயில் விபத்துக்கள் 5 ஆயிரம் பேர் சாவுகள் என்று இருப்பதால், இரயில்வே இலாகா என்ன எமதர்மரின் வேலையை எடுத்துக் கொண்டார்களா ? அல்லது மத்திய அரசு எடுத்துக் கொண் டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மத்திய அரசின் பிரச்னை. நீங்கள் பார்லிமெண்டுக்கு போன்பிறகு கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நம் மாநிலத்தி லிருந்து போனவர்களும் அதில் இருக்கிறார்கள். இந்த விபத்தி னால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்...... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் காட்டுகிற அனு தாபத்திற்கு நன்றி. ஆனால் அதைக்கேட்க வேண்டிய இடம் இது அல்ல.